# தூர்வை நாவலில் சடங்குகள்

***மா. சரவணக்குமார்***
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி

***முனைவர் ச. கந்தன்***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மே**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8990

**முன்னுரை**

நாட்டுப்புற வழக்காறுகளுள் இன்றியமையாத இடத்தைச் சடங்குகள் பெறுகின்றன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெறும் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் சடங்குகள் மூலம் மற்றவர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. இத்தகு சடங்குகளும் நம்பிக்கைகளும் தூர்வை நாவலில் இடம்பெறும் விதத்தை விளக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**"தூர்வை" நாவலின் கதைக்கரு**

இரண்டு தலைமுறைகளுக்கு முன் உருளைக்குடி கிராமத்தில் விவசாய நிலங்களுடன் வீடு வாசல் என்று வசதியாக வாழ்ந்த தலித் சமூகத்தினரின் வாழ்க்கை, அப்பகுதியில் தீப்பெட்டித் தொழிற் சாலைகள், சாக்குக் கம்பெனிகள் போன்றவற்றின் வருகையால் பெரும் மாற்றத்துக்குள்ளாகிறது. அவர்கள் சொந்த தேசத்தில் நாடோடிகளாவதைக் கருவாகக் கொண்டது இந்நாவல்.

**சடங்கு – விளக்கம்**

குறிப்பிட்ட சில நிகழ்வுகள் தொடர்ந்து மனிதர்களால் கைக்கொள்ளப்பட்டுப் பின்பற்றப்படுமானால் அவை சடங்குகள் எனப்படுகின்றன.

மனிதனின் பிறப்பிலும், இறப்பிலும், திருமணத்திலும் வழிபாட்டிலும் சடங்குகள் முற்றிலுமாக நிறைந்து காணப்படுகின்றன. "பெரும் பான்மையான சடங்குகள் சமய வண்ணம் பூசப்பட்ட வைகளாக விளங்குகின்றன. சடங்குகள் சமயத்தின் அடிப்படைகளாகவும் விளங்குகின்றன. சடங்குகள் சமயத்தின் அடிப்படைகளாகவும் விளங்குவதுண்டு. மேலும் சடங்குகளை நடத்துபவர்கள் சமுதாயத்தால் சிறப்பிக்கப்படும் பேற்றினைப் பெற்று உள்ளனர்" *(சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல், ப. 20)* என்று சு. சண்முகசுந்தரம் குறிப்பிடுகிறார்.

**தூர்வை நாவலில் சடங்குகள்**

நாவலில் சடங்குகள் இடம்பெறுவனவற்றைக் கீழ்க்காணுமாறு பகுக்கலாம்.

1. திருமணச் சடங்கு
2. பிறப்புச் சடங்கு
3. இறப்புச் சடங்கு
4. பேய் விரட்டும் சடங்கு

முதலானவையாகும்.

**திருமணச் சடங்கு**

திருமணம் முடிந்த பின் கணவன் மனைவிக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டுப் பிரிகின்றனர். முத்தையா தன் மனைவியை உடன் அழைத்துக் கொண்டு செல்ல மனைவியின் ஊருக்கு வருகிறான். ஆனால் மனைவியின் சகோதரர்கள் அனுப்பி வைக்க மறுக்கின்றனர். அதோடு இருவருக்கும் இனி எந்தவிதத் தொடர்பும் கிடையாது என்று தீர்ப்பு வழங்கினர். அத்துடன் தாலி தீர்த்ததற்கான பணத்தை முத்தையாவைக் கட்டச் சொல்கின்றனர். அதற்கு முத்தையா பரிசம் போடும் பணத்தோடு சரி மற்றபடி ஊருக்கு எந்தப் பணமும் கட்ட முடியாது என்கிறான். இதனை,

> **"நம்ம ஜாதியில கல்யாணச் செலவு கொடுத்து எங்கயாவது தாலி தீர்ந்திருந்தா சொல்லுங்க, ஒத்தடியில தூர நின்னு வாங்கிட்டு போங்க."**
>
> ***(சோ. தர்மன், ப. 131)***

என்றும்

> **"நம்ம ஊர் வழக்கப்படி போட்ட பரிசம்தான் தீர்ப்பு. புள்ள கொல்லி இருந்தா**
> **அது அவுக அவுக இசு்டப்படி"**
>
> ***(மேலது, ப. 131)***

**பெண் பார்க்கும் சடங்கு**

திருமணம் செய்வதற்கு முன்னர் பெண் வீட்டிற்குவந்துமுறைப்படிபெண்பார்க்கும் நிகழ்வு இருந்துள்ளது. பொன்னுத்தாயைப் பெண் பார்க்க பெரிய சோலையும் முத்தையாவும் வந்தனர். முதலில் பொன்னுத்தாயை முனியம்மாளின் வீட்டில் வைத்துத்தான் முதலில் பார்த்தனர். பின்புதான் தேனம்மாளின் வீட்டிற்குச் சென்று பார்த்துப் பேசி திருமணத்திற்கு ஒப்பந்தம் தெரிவித்தனர். இதனை,

> **"பெண் பார்க்க வருகிறவர்கள் பெண் வீட்டில் சாப்பிட்டு விட்டால் பாதி கல்யாணம் முடிந்தது மாதிரிதான். யாருமே சாமானியமாக கை நனைத்து விட மாட்டார்கள்."**
>
> ***(மேலது, 106)***

என்று கூறுவதிலிருந்து பெரிய சோலையும், முத்தையாவும் பெண் பிடித்துப் போய் உணவு உண்டுவிட்டுச் சென்றதோடு திருமண ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னதை அறிய முடிகிறது.

**பிறப்புச் சடங்கு**

> **"தம் பொருள் என்பதம் மக்கள் அவர் பொருள் தத்தம் வினையான வரும்"**
>
> ***(குறள் எண் 63)***

என்ற குறளின் சிறப்பிற்கேற்ப இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டோருக்கு அவர்களுக்கான செல்வம் என்பது குழந்தைச் செல்வம் ஆகும். அதனைத் தெரிவிக்கும் பொருட்டாக நாவலில் மினுத்தானுக்கும் சீனியம்மாளுக்கும் பிறந்த ஆண் குழந்தைக்குப் பெயர் வைக்கும் சடங்கினைச் செய்கிறார்கள். இது குலதெய்வக் கோயிலில் வைத்துத் தலைமுடியினை எடுத்துக் காது குத்தி இச்சடங்கினைச் செய்கின்றனர். இச் சடங்கின்போது உறவினர்களை அழைத்துக் கறி உணவினை விருந்து கொடுத்து மகிழ்விக்கின்றனர். மேலும் அக்குழந்தையின் கையால் தான தர்மங்களையும் செய்ய வைக்கின்றனர்.

***"மினுத்தான் மகனுக்குக் காது குத்தி முடியிறக்க நேமிக்கம் போட்டிருந்தார்கள்"***

***(சோ. தர்மன், தூர்வை, ப. 53)***

வெண்கலக் கும்பா நிறைய வெள்ளி ரூபா நாணங்களை மாடத்தி ஏந்திப் பிடிக்க இரண்டு கைகளாலும் மூன்று குத்து அள்ளி பயல் உண்டியலில் போட்டான். வந்த பண்டாரங்கள் அத்தனை பேருக்கும் அள்ளி அள்ளிப் போட்டான் என்பதன் மூலம் அறிய முடிகிறது.

### இறப்புச் சடங்கு

கிராமத்து மக்கள் மனிதனது பிறப்பிலும், இறப்பிலும் தவறாமல் சடங்கு வைப்பதில் அக்கறையாக இருந்தனர். மாடத்தி இறந்த பொழுது மினுத்தான் தன் வீட்டில் வேலை செய்த குருசாமியையும் கொள்ளி வைக்கச் சொன்னான். அதற்கு ஊரார் எதிர்ப்பு தெரிவித்தனர். இருப்பினும் குருசாமியும் பெரிய சோலையும் மாடத்திக்குக் கொள்ளி வைத்து இறப்புச் சடங்கினை நிகழ்த்தினர்.

***"ஓம் பொண்டாட்டி செத்ததுக்கு ஓம் புள்ளதான் கொல்லி வைக்கணும். புள்ள கொல்லி இல்லன்னாச் சரி வேலைக்காரப் பயலப் போயி கொல்லி வைன்னா எப்பிடி"***

***(மேலது, ப. 157)***

என்று கூறுவதிலிருந்து அறிய முடிகிறது.

மாடத்திக்குத் தான் இறந்து விடுவோம் என்பது தெரிந்ததுமே அவள், மினுத்தானிடம்,

"பெரிய மனுசா நம்ம தோட்டத்துல தெக்கு மூலைல குழி தோண்டிப்

***பொதச்சிரு வருசம் திரும்ன ஓடன கல்லற கட்டி தகரக் கொட்டக போட்டு நல்ல நாள் பெல்ல நாளுக்கு தீபம் போடச் சொல்லு"***

***(மேலது, ப. 156)***

என்றாள். இதன் மூலம் இறப்புக்குப் பின் வருடா வருடம் அந்த நாளில் செய்யும் சடங்கு முறைகளும் வழக்கத்தில் இருப்பதை அறிய முடிகிறது.

### பேய் விரட்டும் சடங்கு

கிராமப்புற மக்கள் உடம்பினுள் இருக்கும் பேயை விரட்டுவதற்குச் சாங்கியப்படி சடங்கு செய்யும் முறையைப் பின்பற்றினர். முத்தம்மாள் என்ற பெண்ணின் உடம்பினுள் சந்தனம்மாள் என்னும் பெண் பேயாக இருந்தாள்.

எனவே அந்தப் பேயை விரட்டுவதற்காக, வன்னிமடையில் இருந்து ராக்கன் என்பவனை அழைத்து வந்து பேய் விரட்டினர்.

வன்னிமடைக்காரன் வந்து மூன்று நாளாக இரவு பகலாக உடுக்கடித்துப் பேய் விரட்டி விட்டுப் போனான் என்றும், மூன்றாவது நாளாகப் பேயினை விரட்டும் சடங்கினைச் செய்யும் போது,

**"நேற்றே முக்காலும் சத்தியமாக மலையேறி விடுகிறேன் என்று முடி எடுத்து கொடுத்து விட்டனர். முத்தம்மாள் அந்த முடியை வாங்கை பச்சை மண் கலயத்தில் வாங்கிப் போட்டு மூடி வைத்துக் கொண்டாள்"**

***(மேலது, ப. 118)***

என்பதிலிருந்து அறிய முடிகின்றது.

### முடிவுரை

சமயம் அல்லது மரபு வழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சில செயல்முறைகளின் தொகுப்பாகும். சமூகத்தின் பயன் கருதி செயல்படுகின்றது. சடங்குகள் ஒழுங்கான கால இடைவெளியிலோ குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலோ அவரவர் விருப்பப்படி நடைபெறலாம். சாஸ்திர விதி வழக்கம் இவைகளை ஒட்டிக் கடைபிடிக்கப்படும். சடங்குகள் என்பது ஒரு சமூகத்தின் கலாச்சாரம், நம்பிக்கை வழக்கம் போன்றவற்றோடு இணைந்திருப்பதை தூர்வை நாவலின் வழி அறிய முடிகின்றது.